செ.வெ.எண்.37 நாள்: 24.04.2020

# பத்திரிக்கைச் செய்தி

**COVID-19** வைரஸ் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்தும் நிமித்தமாக தமிழ்நாடு அரசால் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டபடி, தமிழ்நாடு மீன்வளத்துறை மூலம் மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு ஊரடங்கு காலத்தில் உறுப்பினர் ஒருவருக்கு ரூ.1000- வீதம் சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்ட உள்நாட்டு மீன்துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் பதிவு செய்யப்பட்ட மீனவர் நலவாரிய உறுப்பினர்கள் தங்கள் வங்கிக் கணக்கில் மீனவர் நலவாரியம் மூலம் ரூ.1000- சிறப்பு நிவாரண உதவித் தொகை கிடைக்கப்பெறவில்லை எனில் மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம், அறைஎண்.234, 2வது மேல்தளம், மாவட்ட ஆட்சியரகம், அரியலூர், தொலைபேசி எண். 04329 – 228699, கைப்பேசி எண்.6381344399 என்ற எண்ணை தொடர்பு கொண்டு தங்களுடைய மீனவர் நலவாரிய அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை மற்றும் வங்கிக் கணக்கு விவரங்களை தெரிவித்து சிறப்பு நிவாரண உதவித் தொகை பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**